வந்தேமாதரம்: 786 அல்லஹூ அக்பர்:

## மஹாத்மா காந்திக்கு ஜே.



மதுரை,

**R. M. குலாம் ரசூல்**

அவர்கள் இயற்றிய,

# இந்து முஸ்லீம் ஒற்றுமை

# சுதந்தரா மஞ்சரி.

முதற்பாகம்


சை. ப. வருசைமுஹம்மது ரூவுத்தர் அவர்களால்,

நாடார் பிரஸில் பதிப்பிக்கப்பெற்றது.

மதுரை.

**1924.** [அணா **2.**



O-, IMKR, S
M24.
181824

வந்தேமாதமாதரம்: அல்லாஹூ அக்பர்:

ஆர். எம். குலாம் ரசூல் அவர்களியற்றிய

# சுதந்தா மஞ்சரி.

## விருத்தம்.

ஆதியிலமைந்தருளாகியப் பொருளே
சோதி நவத்திரவிய மாயுதித்த அருளே
மேதினியிலுற்ற கைராட்டினத்திரளே
மேன்மைபெற தாழ்மைகொண்ட வுருவே
தேசபிணி தீர்க்கவந்த ராஜவிஸ்வாசரே
தேன்மாருதம் புரியும் காந்தி அருள் பொருளே
தேவர் சபை போல் மகிழ வார்த்தையுமுன்னாலே
தெரிந்துணர்வீர் இன்னாள் அருள்வீரே

## தருவு

காட்சி கண்காட்சியே—என்ற வர்ணமெட்டு.

வந்தே மாதரமே வாய்ந்த சுதந்தரமே (வந்)

1 வாணவர் போற்றிடும் காந்தி வாக்கதை அரிவோமே
வாதிகளனைவரை வதைத்திட வுதாரமே
வாரும் சுயநிலையைத் தெரிந்து இதில்
வஞ்சக மில்லையே மணந்துணிந்து நேச
வாஞ்சனை சகோதரரை அணிந்து

விருத்தமதை விட்டு
வாருடன் கதரிட்டு
வாக்கியத்தைக் கேட்டு
வாதிகளை விட்டோட்டு (வந)

2 தேசாபிமானிகளின் சொல் சேதிகளறிந்துமே
திகட்டக்கனியதனை தரித்துப் புசிப்போமே
தேடரியாத சுயராட்சி எங்கும்
தித்திக்கும் குலாம் ரசூலின் மாட்சி
தேன் மாருதம் புரியும் நல்ல காட்சி
தேச நன்மை பாட்டு
தெரிந்துணர்வீர் கேட்டு
சித்தமுடனே நாட்டு
ஒற்றுமையாமை கூட்டு (வந்)

---

ஸ்ரீராம ராகவா—என்ற கீர்த்தனையின் வர்ணமெட்டு

1 வந்தேமாதரம் வந்தேமாதரம்
வணங்கிடுவோம்.
இந்துமுஸ்லீம் யாவர் இன்பசகோதரர்
சார்ந்து யார்ந்து வாய்ந்து சேர்ந்து

2 காந்திசொல் வாக்கியம் கற்றோர்க்கும்பாக்கியம்
கதரணிவோம்
சார்ந்த மஹாத்மாவை சமர்சத்தியகீர்த்தியை
தேச விசு வாச நேச (வந்)

3 மதாபிமானி மஹமதிய ஞானி
மதகுருவே நீ
அலிசகோதரர் அன்பர்மஹம்மதியர்
ஆர வீர யார சூர (வந்)

4 அல்லாகு அக்பர் எல்லர்மதஸ்த்தர்
அறிந்திடுவோம்
அன்பன் குலாம் ரசூல் அறிந்துணர்வதைக்கேள்
ஆச நேச பாசமுடன் (வந்)

---

சுயராஜ்ஜியம் அதிக தூரமில்லை—என்ற வர்ணமெட்டு.

1. காருண்ய புண்யாதிபதி சுதந்தர மஹாத்மா காந்தி
கற்றறிவித்த சொல்லால் கதரணிவோம் (கரு)

2. சுதந்தரமே ஜெயம் சுதந்தரமே ஜெயம்
சுழட்டும் கைராட்டினத்தால் சுதந்தரமே ஜெயம் (கரு)

3. நல்வர் இல்லா எல்லை நாம் இருப்பதுந்தொல்லை
நாட்டிற்குகந்த சுய ராட்டினமுமாயில்லை (கரு)

4. சுட்ட சூடாரிவிடும் சொன்ன சொல் ஆராது
சுதந்தரப் பெருமையின் வார்த்தை வீண்போகாது (கரு)

5. சுருதிநமக்கிருக்க சுழலுவ தேனையா
சுதந்தரம்பெற்றோமென்று தெரிந்துணர் வீரையா (கரு)

6: உடல்பொருளாவி மூன்றை தியாகஞ் செய்து விட்டோம்
உண்மை நமக்குவர உரங்குவதேனையா (கரு)

7. அரும்பொருளாயுதித்த அவதார பூரணத்தை
அடக்கியும் உலகினில் ஆவி சூழுதே (கரு)

8. மதுர கவியின் நண்பன் மைந்தன் குலாம் ரசூலின்
மலர் வாக்கமுர்தம்போல் மன மகிழ்வீர்

---

வெள்ளிமலை விராலிமலை—என்ற வர்ணமெட்டு குறம்.

1 ஆதியிலமைந்த பரிபூரணனந்தம்
கைராட்டினத்தி னின்பம்
கதராடையே சுதந்திரம்
கற்றறிந்த காந்தியின் சொல் கேள்பதே அமுர்தம் (ஆதி)

2 பாரிலுங்கள் பாட்டன் பூட்டன் பஞ்சு நூற்றோரையா
நான்சொல்வதுவும் பொய்யா
நன்மை பெறலா மெய்யா
நானிலம் புகழ் மதுர காந்தியின் சொல் அய்யா (ஆதி)

3 கற்றறியாமூடருக்கு காந்தி என்ற பேச்சு
காதால் கேள்போருக் கேச்சு
கதராடை யின்ப மாச்சு
கண்டரியா நாகரீக ராட்டினமுண்டாச்சு (ஆதி)

4 ஏற்கனவே நாகரீகம் வந்து விட்டதாலே
ஏமாந்து கொண்டோம் கேளே
இயம்பினேன் பின் னாலே
எங்கினும் புகழ் சுதந்திரம் வந்திடும் இன்னாளே (ஆதி)

5 நேசர்களே கைத்தொழிலை நேர்மையுடன் சேர்க்க
தேச நன்மை யுண் டாக்க
நேமிக்கின்றேன் ஒன் ருக்க
நித்தமுங்கைத்தொழில் கதரை சித்தமுடன் விற்க (ஆதி)

6 ஒற்றுமையா நண்பனின் சொல் உருதியுடன்கேளும் இதன்
வுண்மையைக் கொண் டாடும்
வுத்தியோகமதைத் தள்ளும்
உத்தமன் குலாம் ரசூலின் நன்மையைக் கொண்டாடும் (ஆதி)

---

சீதா பிராட்டி மனம் வாட—என்ற வர்ணமெட்டு.

கள்ளுக்கு மரம் விடலாமா—மஹாத்மா
காந்திசொல் வார்த்தை தள்ளலாமா (கள்)

பிள்ளை போலே வளர்த்து குலைசெய்வதா வெருத்து
நல்ல குணமிருந்து நாட்டுக்கிடஞ்சல் செய்ய (கள்)

பஞ்சமா பாதகம் பழிவிடுவதே சுகம்
அச்சமில்லாமல் தினம் அருங்குலை செய்யலாமா (கள்)

குலை செய்வதிலும் குலை பெருங்குங்குலை யாவதினால்
அருந்தும் அன்னத்திலும் அழிவு வந்தே விடுமே (கள்)

தேசநன்மை பாராட்டு நேச நண்பர்களோடு
ஞாயநல் வழிதேடு நல்லோர் சொல் வார்த்தை கேளு (கள்)
பாவம் நன்மை யெது ஞாயமிதுவே பாரு
காந்தி மஹான் சூது கண்டோரிவாரிது (கள்)
மதுரகவி கொண்டாடு மணமுடனிதை நாடு
மைந்தன் குலாம் ரசூலோடு மாட்சிமையுங் கொண்டாடு (கள்)

---

ஆலவாய் மதுராபுரி நகர்—என்ற வர்ண மெட்டு.

1 எங்கிலும்புகழ் தங்கமீரான்
சுதந்தரப் பூவேந்தரான்
சுதந்தரப் பூவேந்தரான்
சகோதரர் தங்கமீரான்

தொகையறு

அஞ்சாத சிங்கம் குகைக்குள்ளிருக்க
ஆங்கிலேய நண்பர் அன்னியாயம் பெருக்க
ஆங்காரம் கொண்டோடி ஜெயிலை
அடித்தெறிந்த ஜெயவீர சிங்கம் நீயே.

பாட்டு

2 சித்திர நவமாமணியே
தேசநன்மைக் கோர்மணியே
தேசநன்மைக் கோர்மணியே
செப்பிடும்சுய ராஜ்யநீயே

தமிழ்நாடு ஆவணக்

தொகையரு

அலைசூழ்பூவுலகினில் அவதரித்த நண்பரே
அரசாங்க பரையோடெதிர்த்து
ஆண்மைநியமித்த வாதிகளை நெருக்கி
அடக்கும் தேசநண்பரே.

பாட்டு

3 மாமதுர வாசனைசொல்
மைந்தனே குலாம் ரசூல்
மைந்தனே குலாம் ரசூல்
மகிமைதீன் படியேகில் (எ)

கண்ணுக்கினிய எந்தன் துரைராஜா—என்ற வர்ணமெட்டு.

1 கள்ளைக் குடிக்கவேண்டாம் நண்பரே—இதன்
கருத்தையுரைப்பேன் சற்று கேட்பீரே
கண்மதமாகும் கால்களும் பின்னும்
முன்னும் பின்னும் ஆளைத்தள்ளுமே—உயிர்
மோசத்திற்கிட மாகச்செய்யுமே (க)

2 நல்ல புத்தியை யேன் கெடுப்பானே—கெட்ட
கள்ளுக்குக்காசையேன் கொடுப்பானே
உள்ளபொருள்களும் பெண்டீர்பிள்ளைகளும்
கண்டயிடங்களெல்லாந் திண்டாட்டமே—இந்த
கள்குடி போதையினால் வருநஷ்டமே (க)

3 கெட்டோர்கள் கூட்டுறவும் ஆசாது—இந்த
கேவலத்திற்கிடமும் வருவதேது
நல்லபேர் போவதேன் ஞாயமழிவதேன்
சொல்புத்தி கேளாமல் நீர் கள்புத்தியால்—எங்கும்
சோம்பிந்தலை கவிழ்ந் துளுவதினால் (க)

4 குலேகளவுகன்னத்திற் கிடமாகும்—கோர்ட்டார்
உத்தியோக நிபந்தனைக் குள்படவும்
பிழைகளை செய்வானேன் ஜெயிலுக்குப்போவானேன்
சிறியன் குலாம் ரசூல் சொல்கேட்பீரே—கெட்ட
சோம்பேறிக்குடியை நீர்மறப்பீரே (க)

---

கவ்வல முஸ்சே யாரிதேரி—என்ற மெட்டு

1. முகமதலி சவுக்கதலி
மொழிகேட்போம் இனியே நாம்
முழுதும் ஒற்றுமையாயிருக்க
புகுந்தார் ஜெயில் உள்ளே (மு)

2. ஆண்மை புகழ் நன்பர்களே
அணிவோம் கதர் ஆடை நாம்
அணிந்து நற்சுகம் அடைவதற்கே
ஏன் அய்யா தடை (மு)

தொகையரு

மதஅபி மானத்திற்கு
மனமுடன் சிறைசாலையில்
மகிமைபோற்றி இருந்த
முகமதலி சகோதரரே

3. தேசநன்மைக்கே உழைத்து
சிறைசென்ற மகான் அவர்
செப்பியசொல் வார்த்தைகளே
கற்றுணர்வோமே (மு)

4. மாம்பரிவே தேன்புரிசொல்
மன்னவன் பாகம் சிறு
மைந்தன்குலாம் ரசூல்புவியின்
மதுரத்தேனுகும். (மு)

---

ஆர். எம். குலாம் ரசூல் அவர்களியற்றிய

## சுதந்தரமஞ்சரி.

### நொண்டிச்சிந்து.

1 சுதந்தரக் கொடி பிடிப்போம்—சகோதரரே

மந்திரம் ஜெபித்து சுய தந்திரஞ்செய்வோம்

2 வந்தேமாதர மென்று சொல்லுவோம்—பாரதமக்கள்

விந்தையாய் ஜெபித்த கைப்ராட்டு நூல் நூற்போம்

3 இன்னாட்டுக் கதிபதி நாம்—இருப்பதினல்

அயல்நாட்டு நாகரீக ஆண்மையே வேண்டாம்

4 பட்டுப்பட்டாடைகள் வேண்டாம்—நமக்கு

பட்டணத்தில் பிறர்க்கடிமை தொழில் வேண்டாம்

5 சுயகைத்தொழில்களை விட்டோம்—கெட்ட

துற்மார்க்க வழிகளின் மனமிழந்தோம்

6 மதுர கவியின் வாக்கு —நண்பன்

மைந்தன் குலாம்ரசூல் சொல் மாதவமே

முதல் பாகம் முற்றிற்று

# விளம்பரம்.

சகல கனதனவான்களுக்கும் தெரியப்படுத்துவது யாதெனில் கிட்டப்பார்வை மங்கலானவர்களுக்கும், தூரப்பார்வை மங்கலானவர்களுக்கும், கண் ஆப்ரேசன் செய்தவர்களுக்கும், இன்னும் எவ்வித கண் பார்வை குறைவாகிய பிரபுக்களுக்கெல்லாம் தகுந்த வல்லத்துப் படிக்கம் என்னும் மூக்குக்கண்ணாடிகள் தயாரிலிருப்பதால் நேரில் வந்து கண்ணை சோதித்து கண்ணாடி வாங்கிக்கொள்ளலாம். இன்னும் குளிர்ச்சிக்காகிய கண்ணாடிகளும் காற்றுக்காகிய கண்ணாடிகளும் தனி ரோல்டு கோல்டு நிக்கல் இரும்பு பிரேம்களும் ஷெடி கண்ணாடிகளுக்கு சில் உடைந்திருந்தபோதிலும், கம்பி ஒடிந்து போனதற்கும் பதில்போட்டு கண்ணாடிகள் ரிப்பேர் செய்து கொடுக்கப்படும்.

**R. M. இப்றாகிம் பாபா,**

மூக்குக்கண்ணாடி வியாபாரம்,

கீழச்சித்திரைவீதி, மதுரை.

---

R. M. குலாம் ரசூல் அவர்கள் இயற்றிய புஸ்தகங்கள் சில்லரையாகவும் மொத்தமாகவும் விற்குமிடங்கள்.

மதுரை ஆர். எம். இப்றாகீம் அலிபாபா அவர்கள் கடையிலும் விட்டவாசல் வி. கே. அன் சன்ஸ், கதர் ஸ்டோரிலும், சுவாமி சன்னதி பெரியகடை வீதி, S. காசீம் சாயபு அவர்கள் புஷ்பக் கடையிலும் பெற்றுக்கொள்ளலாம்.

இரண்டாம் பாகம் கூடிய சீக்கிரம் வெளியாகும் எதிர்பாருங்கள்.

இன்னும் தேவையான புஸ்தகங்களுக்கு தமிழ் மொழியாகவும் சுத்தமாகவும் எழுதி ஆர்டர்கொடுத்து அட்வான்சும் அனுப்பினால் உடனே வி. பி. யில் அனுப்பப்படும்.

தங்கள்,

சை. ப. வரிசை முகம்மது ராவுத்தர்,

கரீம்சா பள்ளிவாசல் சந்து,

மதுரை.